# அல்லாஹ்வின் வேதங்கள்

அல்லாஹ் மனிதர்கள் மீது அன்புள்ளவன். மனிதர்கள் நல்லவர்களாக வாழ வேண்டுமென்று அவன் விரும்புகிறான். அதற்காகவே வேதங்களை அருளியுள்ளான்.

## தவ்றாத் வேதம்

ஒரு காலத்தில் எகிப்து நாட்டை பிர்அவ்ன் என்ற மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் மிகவும் கொடியவன். தன்னை இறைவன் என்று கூறியவன். ஆதலால் அவனுக்கும் அவனது மக்களுக்கும் அறிவுரை சொல்ல வேண்டி இருந்தது. அதற்காக அல்லாஹ் மூஸா (அலை) அவர்களை நபியாகத் தேர்ந்தெடுத்தான். தவ்றாத் என்ற வேதத்தை அவர்களுக்கு வழங்கினான். அந்த நாட்டு மக்கள் ஹிப்ரு மொழியைப் பேசினர். ஆதலால் தவ்றாத் வேதமும் ஹிப்ரு மொழியில் அருளப்பட்டது.

## ஸபூர் வேதம்

மூஸா(அலை) அவர்களுக்குப் பின்பும் மக்கள் வழி தவறிச் சென்றார்கள். அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக அல்லாஹ் தாவூத் (அலை) அவர்களை அனுப்பினான். அவர்களுக்கு ஸபூர் வேதம் கொடுக்கப் பட்டது. தாவூத் (அலை) அவர்கள் பலஸ்தீன் பிரதேசத்தில் வாழ்ந்தார்கள். யூனானி மொழியைப் பேசினார்கள். இதனால் யூனானி மொழியில் ஸபூர் வேதம் அருளப் பட்டது.

## இன்ஜீல் வேதம்

ஸபூர் வேதத்துக்குப் பின்னர் இன்ஜீல் வேதம் அருளப் பட்டது. அதனை அல்லாஹ் ஈஸா (அலை) அவர்களுக்கு அருளினான். அவர்கள் ஜெரூசலத்தில் வாழ்ந்தார்கள். சுர்யானி மொழியைப் பேசினார்கள். ஆதலால் இன்ஜீல் வேதம் சுர்யானி மொழியில் அருளப்பட்டது.

## புர்கான் வேதம்

ஈஸா (அலை) அவர்கள் வானுலகுக்கு உயர்த்தப்பட்ட பின்னர் மக்கள் மீண்டும் வழிதவறிச் சென்றார்கள். இதனால் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு புர்கான் வேதம் அருளப்பட்டது. முஹம்மத் (ஸல்) அவர்கள் அதனைப் போதித்தார்கள். அவர்கள் அறபு நாட்டில் வாழ்ந்தார்கள். அறபு மொழியைப் பேசினார்கள். ஆதலால் புர்கான் வேதம் அறபு மொழியில் இறக்கப் பட்டது.



முன்னைய வேதங்கள் அல்லாஹ்வால் இறக்கப் பட்டன. ஆனால் மக்கள் அவற்றை மாற்றியமைத்தார்கள். புர்கான் வேதமோ அவ்வாறு மாற்றியமைக்கப்படவில்லை. ஆதலால் ஏனைய வேதங்களை நம்ப வேண்டும். அவற்றைப் பின்பற்றக்கூடாது. புர்கான் வேதத்தை நம்பவும் வேண்டும். அதனைப் பின்பற்றவும் வேண்டும். இதுவே இறுதி வேதமான அல்குர்ஆன் ஆகும்.

**வேதங்களை விசுவாசிப்போம்.**
**அல்குர்ஆனைப் பின்பற்றுவோம்.**

**பயிற்சி**

**அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களில் சரியான சொல்லின் கீழ் கோடிடுங்கள்**

1. தவ்றாத் வேதம் நபி (மூஸா(அலை), தாவூத்(அலை), ஈஸா(அலை) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.
2. ஸபூர் வேதம் (ஹிப்ரு, யூனானி, அறபி) மொழியில் இறங்கியது.
3. சுர்யானி மொழியில் போதிக்கப்பட்ட வேதம் (தவ்றாத், ஸபூர், இன்ஜீல்) ஆகும்.
4. புர்கான் வேதம் (எகிப்தில், அரேபியாவில், ஜெரூசலத்தில்) முதலில் போதிக்கப்பட்டது.
5. புர்கான் வேதத்தை (நம்ப, பின்பற்ற, நம்பவும். பின் பற்றவும்) வேண்டும்.